## அத்தியாயம் 11

# அம்பா

கடலில் மீன்பிடிக்கும் பொழுது பாடப்படுபவை அம்பாப் பாடல்கள் எனப்படும்.

கடலில் மீன்பிடித்தல் மூன்று வகைகளில் நடைபெறுகின்றது. ஒன்று கரைவலை, மற்றது மாயவலை, அடுத்தது இயந்திரப் படகு என்பனவாகும். கடற்கரையிலிருந்து சுமார் 1000 மீற்றர் தூரத்துள் மீன் பிடித்தல் கரைவலை எனப்படும். இது கொண்டடிவலை, கொண்டோடிவலை எனவும் அழைக்கப்படும். கொண்டடி வலைத்தத்தி ஒன்று சுமார் நாற்பது பேரைக் கொண்டிருக்கும். 'தத்தி' என்பது குழுவாகும். ஆனால் பெருவாரியான மீன் வலையினுள் அகப்பட்டால் அதனை இழுத்துக் கரைசேர்க்க சுமார் அறுபது பேர் வரை தேவைப்படுவர்.

தூரக்கடலுக்குச் செல்லும் சாதாரணத் தோணி மாயவலைத் தோணி எனப்படும். இது பாய்மரத்தைக் கொண்டு காற்றின் உதவியினால் அல்லது இயந்திரத்தினால் இயக்கப்படும். இதில் மூன்று பேர் செல்வர்.

என்ஜின்வோட் எனப்படுவது இயந்திரம் பூட்டப்பட்ட நவீன மீன்பிடி வள்ளமாகும்.

கரைவலைத் தோணி கடலுட் செல்லும்பொழுது அதில் பத்துப்பேர் அமர்ந்திருப்பர். இதில் ஒருவர் தண்டையல். இவர் சுக்கானைப் பிடித்திருப்பார். நாலு பேர் தண்டு போடுபவர்கள். ஒருவர் மிதப்பர் என அழைக்கப்படுவார். தோணியிற் கொண்டு செல்லப்பட்டுக் கடலினுட் போடப்பட்டுக்கொண்டிருக்கும் வலையைக் கலையாது பிடித்துக் கொள்வது இவரது பணியாகும். ஒருவர் வலைவிடுபவர். இவரே கடலினுள் வலையை

விட்டுக் கொண்டு வருவார். தோணியின் நடுவில் இரண்டு பேர் இருப்பார்கள். இவர்கள் இரண்டு பக்கமுமாகக் கடலினுள் வலைக்காலுக்கு இறங்குவர். கடைசியாய் உள்ளவர் தோணியில் அமர்ந்திருப்பார். எதிர்பாராதவிதமாகத் தோணியினுள் தண்ணீர் ஏறினால் அதை இறைத்து வெளியேற்றுவதே இவரது பணியாகும். இப்பத்துப் பேர் போக எஞ்சியோர் கரையில் நின்று வலையை இழுப்பர்.

கரைவலையின் நீள அமைப்பு கம்பான் என்னும் ஒரு சொல்லினால் அழைக்கப்படுகிறது. ஒரு கம்பான் என்பது நூறு பாகங்களாகும். ஒரு பக்கவலை சாதாரணமாக ஐந்து கம்பான்களாகும். இது ஐநூறு பாகங்களாகும். ஆகையால் இரு பக்கங்களுக்குமாக சுமார் ஆயிரம் பாகங்கள் கயிற்று வலை இருக்கும். இத்துடன் சுமார் நூற்றைம்பது பாகம் நைலோன் வலையாயும் இருக்கும். நடுவில் மடிவலை பொருத்தப்பட்டிருக்கும். இது குரளாவலை அல்லது தாய்வலை எனவும் அழைக்கப்படும். இந்நீளம் சராசரியானது. அது தோணிக்குத் தோணி வேறுபடும். இவ்வலையில் கீரி, பாரை, சூரை, கிளவள்ளு, பாரைக்குட்டி, கும்புளா, ஓலைவாலன், வெளவால் பாரை, அறுக்குளா, தோரா, சீலா, வாளை, சாளை, சூடை, ஊலா, கணவா, காரல், நெத்தலி, போன்ற மீன் வகைகள் அகப்படும்.

நாம் முன்னர் பார்த்த விவசாயக் கவிகளில் அப்பிரதேசத்துக்குரிய சூழலும் தன்மையும் வாழ்க்கைமுறையும் எவ்வாறு பிரதிபலிக்கின்றனவோ அவ்வாறே வலையிழுப்போர் பாடல்களிலும் அப்பிரதேசத்துக்குரிய அதாவது நெய்தல் நிலத்துக்குரிய அம்சங்கள் பிரதிபலிப்பதைக் காணலாம். தாளைமரம் அடிக்கடி இப்பாடல்களில் வரும். இசை ஒலிக்கான பல பாடல் அடிகள் இடம்பெறுகின்றன. ஓடியெலே, ஏலே, ஏலோ, ஏலேலோ, ஏலய்யா, ஆவேலா, ஆடாட, ஹைற, ஹைறயா, ஓடிலு என்பன அவ்வாறான இசைத்தொடர்களாகும். அத்தகைய அம்பாப் பாடல் ஒன்று இங்கே இடம்பெறுகின்றது.

ஏலேய் ஏலே ஏலே ஏலேகிளே ஏலா
ஏலாகிளே இய்யா ஏலாவட்டி இய்யா
ஆராவட்டி இய்யா வட்டக் கிளாஞ்சி இய்யா
கோணாமரை இய்யா கோசரியா இய்யா

கோசடிப்பின்னா இய்யா ஹோடிஏலே இய்யா
வலிஇலை வலிஇலை வலிஇலை ஹைற ஹைற

ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாவலை ஓவேலாவலை
ஐயோடவலை ஆடாடோவலை
ஆடும் அந்த வேளையிலே
அம்பிட்டம்போல் மாயையிலே
மாயமென்றால் மந்திரமோ
மந்திரமென்றால் தந்திரமோ
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

சாச்சப்பாடி சகலப்பாடி
சந்தில பொந்தில சமுக்காளத்தில
வங்காளத்தில் வாங்கின வெத்திலை
சிங்காரத்தில் சுவரோரத்தில்
குமரிப்பொண்டுகள் சப்பும் வெத்திலை
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

நாகூர்ச்சிறப்பையும் நல்ல கரான் ஒலி
பள்ளி வடிவையும் நான் சொல்லக் கேளுங்கள்
மானிடரே மானிடரே
தூணுக்குத் தூண் அங்கு நிறுத்தியிருக்குது
தூண்டாமணி விளக்கு ஏற்றியிருக்குது
மங்காமல் காணிக்கை அள்ளி விழுகுது
தங்கக் குடம் இரண்டும் பொங்கி வழியுது
மாடப்புறா இரண்டும் சோலைல மேயுது
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

கொட்டிக் கிழங்குக்கு போறேங்கா ராத்தா
கோபித்துக் கொண்டாராம் பண்டாரம்
அவிச்சி உரிச்சித் தட்டில போட்டதும்
சிரிச்சிக் கொண்டாராம் பண்டாரம்

இப்படிக் கொந்த மச்சானுக்கு
ஓட்டில போட்டு வறுத்திடிச்சி
வாயில போட்டால் ஆகாதோ
காற்று வார நேரத்தைப் பார்த்துத்
தூற்றி விட்டால் ஆகாதோ
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

அங்கிருதம் இங்கிருதம் ஆகாசக்கப்பல்
இங்கிலிசுக்காறண்ட இஸ்ராயில் கப்பல்
புக்குபுக்கு என்று புகைவரும் கப்பல்
நாலாயிரம் சனங்களை ஏற்றி வரும் கப்பல்
அச்சி முறிந்த ஆகாசக்கப்பல்
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

ஓடாதே ஓடாதே கோழிக்குஞ்சே
ஓட்டங்கள் காட்டாதே கோழிக்குஞ்சே
எட்டுப்பணம் வித்த காலத்திலே
கட்டிவளர்த்தேனே கோழிக்குஞ்சே
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

எங்கட ஊரில பஞ்சமாம்
ஏழைச்சனங்களும் மிச்சமாம்
சந்திக்குச் சந்தி கூட்டமாம்
சாகிற கிழவிக்கு ஓட்டமாம்
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

தொங்கா தொங்கா தொங்கக் கிழவா
தொங்கலில் என்னடா சுண்ணாம்பு
சுண்ணாம்பு என்றால் சிவக்காதோ
சிவக்க என்ன திப்பிலியோ
திப்பிலியென்றால் நாறாதோ
நாற என்ன கருவாடோ
கருவாடென்றால் காய்ச்சலோ
காச்ச என்ன கொல்லனோ
கொல்லன் என்றால் கொத்தனோ
கொத்தன் என்றால் கோடலியோ
கோடலி என்றால் பிளக்காதோ
பிளக்க என்ன கொள்ளியோ
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாவலை ஓவேலாவலை
ஏலேலாய் ஓவேலாய்

ஆடாடா வலை ஐயாட வலை
ஏலேலாய் ஓவேலாய்

பிறிதொரு அம்பாப் பாடல் வருமாறு:

| | |
|---|---|
| ஏலே ... லோம் | ஓவே.... லோம்.. |
| ஏலடி... ஏலேம் | ஏலச் ......சிலாமாய் |
| கள்ளச் சிலாமாய் | கலம்பக்கயிறு |
| முப்பிலிக்கயிறு | தேடாக்கயிறு |
| தேடி இழுடா | |
| ஏலே ... லோம் | ஓவே.... லோம்.. |
| சாஞ்சி இழுடா | சவியா இழுடா |
| தாளமரத்துப் | பார்த்து இழுடா |
| கிண்ண மரத்த | கேட்டு இழுடா |
| சின்னப் பொடியா | சேர்ந்து இழுடா |
| மண்ண ஒதச்சி | மாஞ்சி இழுடா |

ஏலே ... லோம்
ஏலடி... ஏலம்
ஏலே ... லோம்

ஆழிக்கடலில்
சள்ளையும் தள்ளி
ஏலே ... லோம்
ஏலடி... ஏலம்

கள்ளச் சிலாமாய்
அலியின் சவிய
ஓடி இழுடா
ஏலே ... லோம்

கடலைப்பார்ரா
புள்ளப் பார்ரா
அல்லாஹ் தருவான்
ஏலே ... லோம்
ஏலடி... ஏலேம்

மருக்கொழுந்து
நேத்து வடிச்ச
வளைஞ்சி இழுடா
ஏலே ... லோம்
ஏலடி... ஏலேம்
கள்ளச் சிலாமாய்
ஏலே ... லோம்

ஓவே.... லோம்..
ஏலச்சிலாமாய்.
ஓவே.... லோம்.

அல்லாஹ்வை நம்பி
சவியா இழுடா
ஓவே.... லோம்
ஏலச்சிலாமாய்

கயித்த இழுடா
அல்லாஹ் தருவான்
உசாராப் புடிடா
ஓவே.... லோம்

காத்துப்புடிக்குது
அள்ளிப் போகுது
அணைச்சி இழுடா
ஓவே.... லோம்
ஏலச்சிலாமாய்

மல்லிகை முல்லை
ஆத்துக் கெழுத்தி
வடிவா இழுடா
ஓவே.... லோம்
ஏலச்சிலாமாய்
கயித்த இழுடா
ஓவே.... லோம்[1]

---

1. முத்து மீரான் எஸ். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள், மீராஉம்மா வெளியீட்டகம், நிந்தவூர், 1997, ப: 125 - 127

## i. கப்பல் பாட்டு

கடலிற் தோணியிற் செல்லும்போது பலர் ஒன்று சேர்ந்து சவள் அதாவது துடுப்பு வலித்தல் வேண்டும். அவ்வேளையில் பாடப்படுவது 'கப்பல் பாட்டு' என அழைக்கப்படுகிறது. தொழிலில் ஒருமித்த உற்சாகத்தை இப்பாடல் ஏற்படுத்தும்.

ஆசைக்கடல் பொங்கி நின்று - இல்லல்லாஹ்
அலிபு லாம்மீம் மொழிதிரண்டு - இல்லல்லாஹ்
அலிபு லாம்மீம் மொழிதிரண்டு - இல்லல்லாஹ்

ஓசையது வலம்புரியாம் - இல்லல்லாஹ்
அனுதினம் ஓடும் கப்பல் முகம்மதியாம் - இல்லல்லாஹ்


பெரிதான நாசுத்தின் பிரதான கப்பல்
பலவீடு ஜம்ழுது திருவாசல் நோக்கி
அரிதான வேதமது புர்க்கான் இன்ஜில்
அதுவான சரக்கெல்லாம் பொதுவாக ஏற்றி
நெறியான ஹக்குடைய தூதர் ஜிப்ரீலும்
நேராக மலக்கும் பாசம் வைத்து
குறிப்பான தானமது கபுகாபு கௌசனி
குல்ஹு" அல்லாஹ் என்றோடுவார் கப்பல்
லாயிலாஹ இல்லல்லாஹ்

நாசுத்தின் கீழ் காம்பரையாம் - இல்லல்லாஹ்
அந்த நபுசம்மாறா வீடதுவாம் - இல்லல்லாஹ்
ஆசைமாசை மாயை துன்யா - இல்லல்லாஹ்
சைத்தான் பாசவலை ஆசனமாம் - இல்லல்லாஹ்

கள்ளன் திருடனும் சைத்தானும் மக்கள்
கல்புக்குள் ஈமானைக் களவாட வருவார்
உள்ளத்துக்குருபற்ற சரமருந்தெல்லாம்
ஒன்றாகக் கருநாடிப் பீரங்கியிட்டு
வெல்லத்துலையாத திக்கிரென்னும் குண்டை
விசாலமாகவே உள்ளத்திலாக்கி
கள்ளத்திரியதை ஓம் என்று கொளுத்த
கள்ளமென்று மாறா ஓடுமடா ஷைத்தான்
லாயிலாஹ - இல்லல்லாஹ்.....



அராபியரால் மன்னாரில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருக்கு மரம் *(Bao Bab Tree).*
இதன் பட்டையும் இலையும் ஒட்டகத்தின் உணவாகும்.



சிலாபத்துறையிலுள்ள அல்லிராணிக் கோட்டையின் சிதைவுகள்




முத்துச் சிப்பிகளைக் கொட்டிலினுட் குவித்து வைத்திருக்கும் காட்சி.
ஆயிரக்கணக்கான சிப்பிகளை உடைக்கும் போது
மிகச் சிலவற்றுள் மட்டுமே முத்து இருக்கும்.




1672 இல் மன்னார்த்தீவின் தோற்றம் (வரைபு: Baldaeus)




**இலங்கைக்கு முதன் முதலில் 1602 இல் ஜோரிஸ் வன் ஸ்பில்பேர்கன் தலைமையில் வந்த ஒல்லாந்தர் குழுவினர், சாய்ந்தமருதுவில் தரையிறங்கி, சம்மாந்துறையில் தங்கியிருந்து, கண்டியரசனைச் சந்திக்கச் சென்ற பாதை. இதுவே அக்காலத் தவளப்பாதை. (வரைபடம்: ஸ்பில்பேர்கன் - 1604; விபரமான படம் ஆர்.எல்.புறோஹியர்-1978)**



மட்டக்களப்புப் புளியந்தீவில் போர்த்துக்கீசரினாற் கட்டப்பட்டு, ஒல்லாந்தரினால் பலப்படுத்தப்பட்ட கோட்டை. *(Baldaeus - 1672)*



மட்டக்களப்பு வாவிக்குக் குறுக்கேயான கல்லடிப்பால நிர்மாணத்தின் போது *(1929)*




கல்லடிப்பாலம்




Azeez's Area of Administration
Copied from : The Souvenir of the
Harvest Festival, Kalmunai - 1943

*1942ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட*
*கல்முனை அவசரகாலக் கச்சேரியின் நிர்வாக எல்லைப் பரப்பு.*
*இதன் முதலாவது உதவி அரசாங்க அதிபராக எ.எம்.எ. அஸீஸ் கடமையாற்றினார்.*



அழகிய சித்திர வேலைப்பாடுகளுடான இரட்டை மாட்டு வண்டில்



அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை வளவினுள் அருகருகே நின்ற
நான்கு கொப்புகளையும் இரண்டு கொப்புகளையுமுடைய
தென்னை மரங்கள். அவை பின்னர் செத்துவிட்டன.




1940 களின் பிற்பகுதியில் அம்பாறை நகரம்



பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவும்
உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பரும்
இங்கினியக்லையில் 1951ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11ஆம் திகதி



இங்கினியகலையிலுள்ள சேனநாயக்க சமுத்திரம்



பொத்துவிலிலுள்ள அறுகம்பைப் பாலம்.
2004இல் சுனாமியால் முற்றாகச் சேதமடைந்து
தற்போது புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது.



கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசற் கொடியேற்றத்தின்போது
பக்கீர் பாவாக்கள் பைத்துப் படிக்கிறார்கள்.



பாவாக்கள் அமர்ந்திருந்து இசை வழங்குகிறார்கள்.



பக்கீர் ஜமாஅத்தினரின் றாத்திப்



பாவா ஒருவரின் 'குத்துவெட்டு' எனும் நிகழ்ச்சி



கடலுக்குப் போக மீனவர் ஆயத்தமாகின்றனர்



பிடித்துக் கரைக்குக் கொண்டுவரப்பட்ட மீன்கள்
ஏல விற்பனைக்குத் தயாராகவுள்ளன.



கடலோரத் தென்னந் தோட்ட நிழலில் அமைந்துள்ள மீன்வாடிகள்



மீன்பிடிப் பிரதேசத்தின் மற்றொரு அழகிய தோற்றம்